ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2059/55 - 2018 පෙබරවාරි මස 23 වැනි සිකුරාදා - 2018.02.23

*2059/55 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**காடு பேணற் கட்டளைச் சட்டம்**

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

**கட்டளை**

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், கீழ் இணைக்கப்பட்டுள்ள இல. 01, 02, 03, 04 மற்றும் 05 ஆம் அட்டவணைகளில் வரையறுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் உட்பட்ட 13.0867 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட நக்கல்ஸ் ஒதுக்கு காட்டுக்கு அருகாமையில் அமைந்துள்ள லேலி அம்பே, கொல எல, ஹேவுட், ஹல்கொல்ல, புஹு அரம்ப காட்டை 2018 ஆம் ஆண்டு மாசி மாதம் 15 ஆந் திகதியிலிருந்து ஹேவுட், ஹல்கொல்ல, புஹுஅரம்ப ஒதுக்குக் காடு என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

மைத்திரிபால சிறிசேன,
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,
பத்தரமுல்லை,
*2018, மாசி 15.*

1A - PG 3928 — 82 (2018/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### அட்டவணை 1

மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள உடன்கொமுவ கிராமத்தின் நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட பீ.பீமா 1412 இன் துண்டு இலக்கம் 1, 2 மற்றும் 3 என அடையாளமிடப்பட்ட லேலி அம்பே காடு என்னும் காணிகளின் மொத்தக் காணிகளான 0.6763 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்ட அரசாங்கக் காணி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது :-

வடக்கு : பீ. பீ3951 இன் துண்டு இலக்கம் 10712, பிரதான பாதையிலிருந்து ஹப்புவிந்த வரையிலான பிரதேச சபைப் பாதை அத்துடன் பீ. பீ3951 இன் துண்டு இலக்கம் 10712 ;

கிழக்கு : பீ. பீ3951 இன் துண்டு இலக்கம் 10712, 10713, வெட்டப்பட்ட ஓடை, பீ. பீ3951 இன் துண்டு இலக்கம் 10713 அத்துடன் மாத்தளையிலிருந்து எல்கடுவ வரையிலான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாதை ;

தெற்கு : பீ. பீ3951 இன் துண்டு இலக்கம் 10713, வெட்டப்பட்ட ஓடை, பீ. பீ3951 இன் துண்டு இலக்கம் 10713, பிரதான பாதையிலிருந்து ஹப்புவிந்த வரையிலான பிரதேச சபைப் பாதை, பீ. பீ3951 இன் துண்டு இலக்கம் 10713 ;

மேற்கு : பீ. பீ3951 இன் துண்டு இலக்கம் 10712 ;

விஸ்தீரணம் : 0.6763 ஹெக்டெயார்.

### அட்டவணை 2

மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இம்புள்பிட்டிய கிராமத்தின் நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட பீ.பீமா 1413 இன் துண்டு இலக்கம் 1, 2, 3 மற்றும் 4 என அடையாளமிடப்பட்ட ஹேவுட் எஸ்டேட் என்னும் காணிகளின் மொத்தக் காணிகளான 0.8676 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்ட அரசாங்கக் காணி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது :-

வடக்கு : பீ. பீமா715 இன் துண்டு இலக்கம் 17, 18, 20, 21, 27 (பிரதான பாதையிலிருந்து வீடு வரையிலான பாதை), 26, 4, 28 மற்றும் 30 ;

கிழக்கு : ரீ. பீ46680, பீ. பீமா 715 இன் துண்டு இலக்கம் 31, 39, 40, 41, 47 அத்துடன் கொல எல ;

தெற்கு : பீ. பீமா715 இன் துண்டு இலக்கம் 46, 42, 38, 32, 49, 32, 33, 28, பிரதான பாதையிலிருந்து வீடு வரையிலான பாதை ; அத்துடன் கொல எல ;

மேற்கு : கொல எல அத்துடன் வத்தேகமவிலிருந்து எல்கடுவ வரையிலான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாதை மற்றும் பீ. பீமா 715 இல் துண்டு இலக்கம் 6 ;

விஸ்தீரணம் : 0.8676 ஹெக்டெயார்.

### அட்டவணை 3

மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இம்புள்பிட்டிய கிராமத்தின் நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட பீ.பீமா 1413 இன் துண்டு இலக்கம் 5, 6 மற்றும் 7 என அடையாளமிடப்பட்ட ஹேவுட் எஸ்டேட் என்னும் காணிகளின் மொத்தக் காணிகளான 0.8518 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்ட அரசாங்க காணி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது :-

வடக்கு : பீ. பீமா 715 இன் துண்டு இலக்கம் 36, 37 மற்றும் 49 ;

கிழக்கு : பீ. பீமா 715 இன் துண்டு இலக்கம் 57, 58, 59, 61, 60 மற்றும் தோட்டத்திலிருந்து தோட்டத்துக்குச் செல்லும் பாதை ;

தெற்கு : புலத்வத்த ஓயா, நடை பாதை, பீ. பீமா 715 இன் துண்டு இலக்கம் 62, 56, 62, புலத்வத்த ஓயா அத்துடன் பீ. பீமா 715 இன் துண்டு இலக்கம் 53 ;

*மேற்கு :* பீ. பீமா 715 இன் துண்டு இலக்கம் 55, 52, 51, 50, 44, 43, ரீ. பீ 43535, புலத்வத்த ஓயா அத்துடன் ரீ. பீ 43535 ;

விஸ்தீரணம் : 0.8518 ஹெக்டெயார்.

**அட்டவணை 4**

மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இம்புள்பிட்டிய கிராமத்தின் நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட பீ.பீமா 1414 இன் துண்டு இலக்கம் 1 என அடையாளமிடப்பட்ட ஹல்கொல்ல அடர்ந்த காடு என்னும் காணிகளின் மொத்தக் காணிகளான 1.0350 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்ட அரசாங்கக் காணி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது :-

*வடக்கு :* ஹல்கொல்ல ஆறு ;

*கிழக்கு :* வத்தேகமவிலிருந்து எல்கடுவ வரையிலான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாதை ;

*தெற்கு :* பீ. பீஏ 508 இன் துண்டு இலக்கம் 3, பீ. ஆர். எம். எச். புஞ்சிபண்டாவுக்கு உரித்தான ஹல்கொல்லே வத்த, பீ. பீஏ 508 இல் துண்டு இலக்கம் 2 மற்றும் ரீ. எம். ரீ. ஹீன்பண்டாவுக்கு உரித்தான ஹல்கொல்லே வத்த ;

*மேற்கு :* ரீ. எம். ரீ. ஹீன்பண்டாவுக்கு உரித்தான ஹல்கொல்லே வத்த, பீ. பீஏ 508 இன் துண்டு இலக்கம் 2 அத்துடன் ஹல்கொல்ல ஆறு ;

விஸ்தீரணம் : 1.0350 ஹெக்டெயார்.

**அட்டவணை 5**

மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தின், உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ரத்வத்த கிராமத்தின் நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட பீ.பீமா 1415 இல் துண்டு இலக்கம் 1 என அடையாளமிடப்பட்ட புஹூஅரம்ப என்னும் காணிகளின் 9.6560 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்ட அரசாங்கக் காணி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது :-

*வடக்கு :* காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தான கடுவல எஸ்டேட், நீர் வழி, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தான கடுவல எஸ்டேட், ரைதலாவயிலிருந்து வெஹிகல வரையிலான பிரதேச சபைப் பாதை, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தான கடுவல எஸ்டேட், ரத்வத்த கிராமம், உடவெஹிகல கிராமம், பீ. பீமா 18 இன் துண்டு இலக்கம் 01 மற்றும் நீர் வழி ;

*கிழக்கு :* நீர் வழி, உடவெஹிகல கிராமம் மற்றும் பஹல வெஹிகல கிராமம், பீ. பீமா 18 இன் துண்டு இலக்கம் 01, பஹல வெஹிகல கிராமம், பீ. பீமா 18 இன் துண்டு இலக்கம் 4 மற்றும் 3 ;

*தெற்கு :* பீ. பீமா 18 இன் துண்டு இலக்கம் 03, கே. கழுவாவுக்கு உரித்தான கும்புரேகெதர வத்த, ஆறு, கே. ஹொரத்தலி அத்துடன் இன்னும் சிலருக்கு உரித்தான கும்புரேகெதர வத்த, பீ. பீமா 18 இன் துண்டு இலக்கம் 5, 1, ரைதலாவயிலிருந்து வெஹிகல வரையிலான பிரதேச சபைப் பாதை, பீ. பீமா 18 இன் துண்டு இலக்கம் 7 (வெட்டப்பட்ட ஓடை), 8, புஹூஅரம்பே ஆறு, திம்புல்கொட கிராமம் அத்துடன் நியரேபொல கிராமம் ;

*மேற்கு :* நியரேபொல கிராமம், புஹூஅரம்பே ஆறு, காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தான கடுவல எஸ்டேட் அத்துடன் டேவிட்சன் தனியார் கம்பனிக்கு உரித்தான கடுவல எஸ்டேட் ;

விஸ்தீரணம் : 9.6560 ஹெக்டெயார்.

03-477

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.